மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அதன் மதிப்பீட்டுச் செலவு ரூ. 10.90 லட்சங்கள் ஆகும்.

Buildings for Primary Health Centres

* 175 Q.—THIRU R. R. MUNUSWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that the Primary Health Centre of Vallam Panchayat Union, Gingee taluk is functioning in a rented building; and

(*b*) if so, whether there is any proposal under the consideration of the Government to provide it with a building of its own?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

* 176. வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்முடிப்பூண்டியில் பிரதம சுகாதார நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட திட்டம் ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : கும்முடிப்பூண்டியில் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கான கட்டிடம் முறைப்படி கட்ட அரசு ஆணை பிறப்பித்துள்ளது.

N.C.C. Training camp at Red Hills

* 177 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether any Medical Unit of the N.C.C. was held in Red Hills about December 1970; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) தேசிய மாணவர் படை, மாணவ, மாணவியரின் முதுநிலைப்பிரிவின், ஒருங்கிணைந்த ஆண்டுக்குரிய பயிற்சி முகாம் ஒன்று, முகாம் தளவாய், மேஜர் பி.ஏ., குருஸ் அவர்களால், செங்குன்றத்தில் 1970-ம் ஆண்டு டிசம்பர் 24-ஆம் நாள் முதல் 1971 சனவரி 4-ம் நாள் வரை நடத்தப்பட்டது. இதில் சென்னை, மதுரை, வேலூர் மருத்துவக் கல்லூரிகளிலுள்ள மருத்துவ மாணவர்கள் பிரிவுகளும் இதர பிரிவுகளுடன் பங்கு கொண்டன.

THIRU N. DENNIS : May I know whether Government would take steps for conducting such camps in other rural areas?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : இது ரூரல் ஏரியாவா, அர்பன் ஏரியாவா என்ற பிரச்சினையைப் பொறுத்ததல்ல. தேசிய மாணவர் படையைச் சேர்ந்தவர்கள், தங்களுடைய பயிற்சியைத் தாங்களே வளர்த்துக் கொள்ளுவதற்கு ஏற்றவிதத்தில் அந்தப் பயிற்சியை முகாம் மூலமாகப் பெறுகிறார்கள்.